***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No.168/2021 – P.W. 2 (LW5)***

| | |
|---|---|
| *Name* | அருணாச்சலம் |
| *Father/Husband's Name* | காசிநாதன் |
| *Village* | அப்பரசம்பேட்டை |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *49* |

**எதிரி ஆஜர். இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 15.06.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும்.

2. நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான். மேற்படி கையொப்பத்தினை நான் எங்கள் ஊரை சேர்ந்த கிருஷ்ணன் என்பவர் செருமங்கலத்தில் இருந்து காரக்கோட்டை செல்லும் வழியில் 5ம் நம்பர் வாய்கால் அருகே அதே திசையில் வந்த வாகனம் மோதி விபத்தை ஏற்படுத்திய சம்பவம் தொடர்பாக கடந்த 27.02.2020 ம் தேதி மாலை 03.30 மணியளவில் விபத்து ஏற்பட்ட இடத்தை வடுவூர் போலீசார் எங்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் அதில் நானும், ரவிந்திரன் என்பவரும் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தோம். **பார்வை மகசரில் உள்ள 2 வது கையொப்பம் அசா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

கிருஷ்ணன் எனது ஊரை சேர்ந்தவர் என்றால் சரிதான். சொந்தக்காரர் கிடையாது. எனக்கு எழுதப்படிக்க தெரியாது என்றால் சரிதான். போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். அதில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi